தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 30-5-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலை நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் நிறைவு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் சொக்கனூர் ஊராட்சியில் 23-05-2015 முதல் 29-05-2015 வரை நடைபெற்றது.

இம்முகாமில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவ மாணவிகளால் முத்துக்கவுண்டனூரின் பள்ளி வளாகத்தில் உள்ள புதர்கள் மற்றும் களைகள் அகற்றப்பட்டுத் தூய்மைப்படுத்தப்பட்டது. மேலும், அப்பள்ளியின் உயர்நிலைக் கல்வி வளாகம் வர்ணம் பூசப்பட்டது. மற்றும் முத்துமலை முருகன் கோவிலின் வளாகத்தையும் மலைப்பாதையின் இருபுறமும் களைகளை அகற்றித் தூய்மைப்படுத்தினர். முனைவர். லதா, நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் அவர்கள், அவ்வெற்றிடங்களில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் 50 அரச மரக்கன்றுகள் நடப்பட்டன.

மேலும் 2015ம் ஆண்டை ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச மண்வள ஆண்டாக அறிவித்துள்ளது. இதையொட்டி வேளாண் பல்கலையில் உள்ள மண்ணியல் துறையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாக முகாமில் நிகழ்ந்த கருத்தரங்கில் பள்ளி மாணவர்களுக்கு மண் வளம் குறித்த விழிப்புணர்வை முனைவர். அ. வடிவேல், பேராசிரியர், மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள், வழங்கினார். இக்கருத்தரங்கில் மண்ணின் பயன்கள், வகைகள் மற்றும் மண்ணின் தன்மைகள் ஆகியவை குறித்து செயல் விளக்கம் மூலம் விளக்கப்பட்டது.

மேலும் இக்கருத்தரங்கில் மண்ணியல் துறை பேராசிரியர்கள் முனைவர். வசந்தி, முனைவர். பாக்கியவதி மற்றும் உதவிப் பேராசிரியர்கள் லதா மற்றும் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் பங்குபெற்றனர். சர்வதேச மண்வள ஆண்டை முன்னிட்டு வீரப்பக்கவுண்டனூரில் முனைவர்.அ.வடிவேல், பேராசிரியர், மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அவர்களால் பேரணி தொடங்கி வைக்கப்பட்டுப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

சொக்கனூரில் தீவனப் பயிர் சாகுபடி என்னும் தலைப்பில் முனைவர் வ. வாசுகி, உதவிப்பேராசிரியர் உழவியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அவர்கள், சிறப்புரை வழங்கினார். தீவனப் பயிர் சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்களின் பயன்களையும், அதன் செயல்பாடுகளையும் பொதுமக்களுக்கு விளக்கினார்.

சொக்கனூர் பள்ளி வளாகத்தில் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாமின் நிறைவு விழா **29-05-2015** அன்று மாலை நடைபெற்றது. அதில் சிறப்பு முகாமின் ஏழு நாட்களில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவ மாணவிகளின் செயல்களையும், தொழில்நுட்ப செயல் விளக்கங்களையும், அவர்களின் தூய்மைப் பணிகளையும், பொதுமக்களுக்கான விழிப்புணர்வு பேரணி நிகழ்வுகள் பற்றியும் முகாம் அறிக்கையில் முனைவர் மு.ரா.லதா நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் அவர்கள், நினைவுறுத்தினார்.

வாழ்த்துரை வழங்கிய திரு. சிவமுருகேசன் அவர்கள் அரசின் வளர்ச்சித் திட்டங்களை கிராமங்களுக்கு கொண்டு வர வேண்டும் என்று கூறினார்.

சிறப்புரை வழங்கிய முனைவர். ச. மகிமைராஜா, முதன்மையர் (வேளாண்மை), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள், இந்தியாவில் **13** கோடி மக்கள் பட்டினியால் தவிக்கின்றனர் என்ற கசப்பான உண்மையை எடுத்தக் கூறி ஆட்சியாளர்களாகவும், ஆராய்ச்சியாளர்களாகவும் வேளாண் அலுவலர்களாகவும் பணிபுரியப் போகும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் இதனை உணர்ந்து அவர்கள் தேவைகளை பூர்த்தி செய்து நாட்டு முன்னேற்றத்திற்கு நல்வழியில் கடமையாற்ற வேண்டும் என்று கூறினார் .

சிறப்புரை வழங்கிய முனைவர். ச. மோகன் முதன்மையர் (பட்ட மேற்படிப்பு), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள், நாட்டு நலப்பணித் திட்ட மாணவ மாணவிகளின் முயற்சியைப் பாராட்டி அனைவரையும் ஊக்குவித்தார்.

தலைமையுரை வழங்கிய முனைவர். கு. ரா. .ஆனந்தகுமார், பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள், மாணவ மாணவிகளின் சேவைகளைப் பாராட்டி வாழ்த்தினார். நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவடைந்தது.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்